# சங்ககால வணிகத்தில் ஆளுமையும் மொழிக்கலப்பும்

***சு. காளீஸ்வரி***
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
பதிவு எண் : 21212014022009
ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி தழிழாய்வு மையம், தூத்துக்குடி
மனோான்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்ச அங்கீகாரம் பெற்றது. அபிசேகப்பட்டி
திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.

***முனைவர் ச. மல்லிகா***
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி தழிழாய்வு மையம், தூத்துக்குடி
https://doi.org/10.5281/zenodo.15323799

***ஆய்வுச்சுருக்கம்***

*பண்டை தமிழ் மக்கள் வணிகத்தில் தலைச்சிறந்தவர்களாகத் திகழ்ந்துள்ளனர். வணிகம் உள்நாட்டு, அயல்நாட்டு வணிகம் என இருவகையில் நடைபெற்றது. வணிகத்திற்கு அடிப்படையான பண்டமாற்றுமுறை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வணிகத்தில் சிறப்பாகச் செயல்பட்டது. வணிகத்தில் வணிகரின் ஆளுமைப் பண்புகள் வெளிப்படுகின்றன. வணிகத்தில் அவர்கள்; பயன்படுத்திய உத்திகள், கடைப்பிடித்த வழிமுறைகள், நேர்மை ஆகியவை அவர்களின் மேலாண்மைத் தன்மையையும் ஆளுமையையும்; வெளிக்கொணர்கிறது. அயல்நாட்டு வணிகம் சங்ககாலத்தில் தொடங்கி இன்றைய காலம் வரை நடைபெற்று வருகின்றது. அயல்நாட்டினர் வருகை தமிழோடும் தமிழரோடும் மொழிக்கலப்பு ஏற்பட காரணமாகிறது. தமிழும் அவர்கள் மொழியோடு கலந்தது. மொழிக்கலப்பினால் தமிழர்களுக்கிடையே பல்வேறு மொழிக்கூறுகள் வளாந்துள்ளன. அயல்நாட்டினர் தமிழரின் துறைமுகங்கள் மற்றும் பண்டங்களுக்கு அவர்களின் மொழியோடு தமிழும் கலந்த மொழியில் பெயரிட்டு அழைத்தனர். அம்மொழிக்கூறுகள் தமிழோடு ஒன்றிணைந்து காணப்படுகின்றன. மொழிக்கலப்பு வணிகத்தின் மூலமும் ஏற்பட்டது. வணிகத்திற்கும் மொழிக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. மொழிக்கலப்பினால் வணிகம் மேன்மை அடைந்துள்ளது. கடல் கடந்த வணிகத்தின் மூலம் தமிழரின் பண்பாடும் நாகரீகமும் பிறநாட்டிற்கும் பரவியுள்ளது. சங்ககால வணிகம் தமிழரின் பண்பாட்டையும் மொழியையும் உலகறியச் செய்துள்ளது.*

**முன்னுரை**

*சங்க இலக்கியங்கள் தமிழ் மக்களின் வரலாற்றினை அறிந்து கொள்ள முதன்மைக் காரணியாக அமைகின்றன. திணை அடிப்படையிலான வாழ்வினை செம்மையாக வாழ்ந்தவர்கள். வாழ்வியலோடு பொருளிலையும் போற்றினர். பொருளின் அவசியத்தை அறிந்து அதனை வணிகத்தின் மூலம் ஈட்டியவர்கள். பண்டமாற்றில் தொடங்கிய அவர்களின் வணிகம் கடல் கடந்து நாடு கடந்து அயல்நாட்டு வணிகமாக வளர்ச்சிப் பெற்றது. வணிக வளர்சிக்கு அவர்களின் ஆளுமைத்திறன் காரணமாகிறது. அவ்வணிகச்சூழலில் பொருள்கள் மட்டும் இடமாறவில்லை. அவ்வணிகப் பெருமக்கள் பேசுகின்ற மொழியும் ஒன்றோடுவொன்று கலந்து மொழிக்கலப்பும் உண்டானது.*

இருமொழியிலும் அம்மொழியோடு சார்புடைய புதியச்சொற்கள் உருவாகின. இவ்வுண்மையை வரலாற்று ஆய்வாளர்களும் எடுத்துரைக்கின்றனர். மொழிக் கலப்பிற்கு வணிகம், ஆட்சிமுறை, மதபோதகம் எனப் பல காரணிகள் காணப்படுகின்றன. அக்காரணிகளுள் வணிகம் மொழிக்கலப்பிற்குக் காரணமாக அமைவதை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

**குறிப்புச்சொற்கள்**

வணிகம், ஆளுமை, மொழிக்கலப்பு, தமிழ்மொழி, அயல்நாட்டு மொழிகள், யவனர்கள், துறைமுகங்கள், கிரேக்கம், அரேபியம், சீனம்

**ஆய்வு அறிமுகம்**

சங்ககாலவணிகம்மக்களின்பொருளியல் நிலையும் அவர்கள் அயல்நாட்டினருடன் கொண்டதொடர்பினையும்எடுத்துரைப்பதாக அமைகிறது. வணிகத்தின் மூலம் அயல்மொழி தமிழிலும் தமிழ்மொழிச் சொற்கள் அயல்மொழியிலும் திரிந்து பல புதியச் சொற்கள் பிறந்தன. இம்மொழிக்கலப்பினைச் சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. அச்சொற்களில் பல இன்றளவும் புழக்கத்தில் இருக்கின்றன.

**கருதுகோள்**

சங்கால வணிகத்தின் மூலம் அயல்நாட்டினர் வருகை மட்டுமின்றி அவர்களின் மொழி தமிழோடும் தமிழ் அயல் மொழியோடும் கலந்ததனை சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.

**ஆய்வு அணுகுமுறை**

வணிகத்தின் வகையைப் பகுத்துக் கூறும் போது பகுப்புமுறைத் திறனாய்வும், மொழிக்கலப்பினை எடுத்தியம்புகின்ற போது ஒப்பிட்டுமுறைத் திறனாய்வும், அவற்றினை விளக்க முற்படும்போது விளக்கமுறைத் திறனாய்வும் இவ்வாய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வணிகம் - சொல் - பொருள்**

வணிகம் என்பது மனிதனது தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்றும் இலாப நோக்குடைய அல்லது இலாப நோக்கமற்ற பொருளாதாரச் செயல்பாடு வாணிகம் என்பது பொருட்கள் சேவைகள் இவற்றை வாங்குவதையும், விற்பதையும் குறிக்கும். ஒரு மனிதனுக்கு மற்றொருவருவனிடம் உள்ள பொருள் தேவைப்படுகிறது. அதைப் பெற ஆர்வம் ஏற்படுகிறது. அதோடு மற்றோர் செய்யத்தக்கச் சேவை தேவைப்படுகிறது. என்ற அடிப்படை உண்மையே வாணிகத்துக்குத் தோற்றுவாயாகும் எனக் கலைக்களஞ்சியம் தெரிவிக்கின்றது.

வணிகம் என்ற சொல் Commerce என்று ஆங்கிலத்தில் வழங்கப்படுகிறது. வணிகமானது தொழில் முறையின் அடுத்தக்கட்ட வளர்ச்சி ஒரு நாட்டின் பொருளாதார நிலையை மதிப்பிட உதவும் சிறந்த கருவியாக பயன்படுவது அந்நாட்டின் வணிகமாகும். சங்ககாலத்தில் வணிகமானது உள்நாட்டில், கடல் கடந்து வெளிநாட்டில் என இரு நிலைகளில்நடைபெற்றுள்ளன. அக்காலத்தில் தமிழகம் மேற்கொண்ட விரிவான மற்றும் இலாபகரமான வெளிநாட்டு வணிகம், தமிழ் மக்கள் மிகச்சிறந்த கடலோடிகள் என்பதை மெய்ப்பிக்கின்றன. கடற்கரையோரமாகப் பொருள்களைப் பாதுகாப்பாக வைப்பதற்குச் சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டன. முக்கியத் துறைமுகங்களில் கலங்கரை இலங்குசுடர் எனும் ஒளிவிளக்கு கோபுரங்கள் இருந்தன.

**உள்நாட்டு வணிகம்**

உள்நாட்டு வணிகத்தைப் பொறுத்தவரையில் மொழி, பழக்கவழக்கம், வணிக நிபந்தனைகள் நாடு முழுவதும் ஒன்று போல் இருந்ததனால் வணிகர்கள் சிக்கலின்றி வணிகம் செய்ய அவை ஏதுவாயின. உள்நாட்டு வணிகமானது உள்நாட்டில் கிடைக்கக்கூடிய, உற்பத்தியானப் பொருட்களை அந்நாட்டிலே விற்பனை செய்வது. உள்நாட்டு வணிகம் அக்காலத்தில்

*பெரும்பாலும் பண்டமாற்று முறையில் நடைபெற்றது. சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர் அன்றாட தேவையான அரிசி, பருப்பு, உப்பு, பால், தயிர், மீன், இறைச்சி முதலான பொருள்களைக் காசு கொடுத்து வாங்காமல் பண்டமாற்று செய்து கொண்டார்கள் பண்டமாற்று என்பது ஒரு பொருளை கொடுத்து அதற்கு ஈடாக இன்னொரு பொருளைக் கொள்வது அதிக விலையுள்ள பொருள்களை மட்டும் காசு கொடுத்து வாங்கினார்கள் என்று பண்டமாற்று முறையைப் பற்றிய கருத்தினை பதிவு செய்கிறார் மயிலை.சீனிச்சாமி.*

**பண்டமாற்று முறை**

*பண்டமாற்று என்பது ஒரு பொருளுக்காக இன்னொரு பொருளைப் பரிமாற்றிக் கொள்ளுதல் இது பண்டைய கால செலவாணியாம். சங்க காலத்தில் ஆரம்பத்தில் இம்முறை பின்பற்றப்பட்டது. பண்டமாற்றின் வளர்ச்சி நிலையே வணிகமாகும்.*

*திணை சூழலை வாழ்க்கை முறையாகக் கொண்ட குறிஞ்சி நிலமக்கள் தேன், கிழங்கு வகைகளையும், முல்லை நில மக்கள் பால், தயிர், வெண்ணெய் போன்ற பொருட்களையும், மருத நில மக்கள் நெல், தானிய வகைகளையும், நெய்தல் நில மக்கள் மீன், உப்பு, கருவாடு ஆகிய பொருட்களையும் ஒருவருக்கொருவர் கொடுத்து பண்டமாற்று முறையில் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளனர். சங்க காலத்தில் ஓரிடத்தில் கிடைக்கும் பொருள்களைத் தேவையுள்ளவர்களிடம் கொண்டு சென்று அதற்கு ஈடாக அவர்களிடம் வேறுயொரு பொருள்களை மாற்றாகப் பெறுவது வணிகமாகக் காணப்பட்டது. இப்பண்டமாற்றுமுறை பிற்கால வணிகத்திற்கு அடித்தளமாகத் திகழ்ந்துள்ளது என்பதை,*

***கானுரை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்***
***மான்தசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்***
***தயிர்கொடு வந்த தசும்பு நிறைய***
***ஏரின் வாழ்நர் பேர்இல் அரிவையர்***
***குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்நெல்***
***முகந்தனர் கொடுப்ப உகந்தனர் பெயரும்***

***(புறம் - 33)***

*என்ற புறநானூற்றுப் பாடல் தெளிவுப் படுத்துகின்றது.*

*(பெரும் பாண் -155-165, ஐங்குறுநூறு - 47,48,49,98, நற்-183,239,118,97, குறு - 269,100,221, பொருநர் - 214-217, அகம் - 140,340,320,60,61,296,245, புறம் - 343) போன்ற பாடல்களும்; பண்டமாற்று முறையினை எடுத்துரைக்கின்றன.*

**வெளிநாட்டு வணிகம்**

*சங்க கால மக்களிடையே உள்நாட்டு வணிகம்சிறப்புற்றிருந்தது போல வெளிநாட்டு வணிகமும் சிறப்புடன் செயல்பட்டுள்ளது. பண்டைத் தமிழகத்தினுடனான வணிக உறவு வெளிநாடுகளிடையே மேலோங்கி இருந்ததைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பல்வேறு நாடுகளும் தமிழகத்துடன் வணிகத் தொடர்பு வைத்துக் கொள்வதற்குக் காரணம் தமிழகத்தின் இயற்கை வளங்களும், பொருளின் தரமும் ஆகும். இயற்கை வளம் தட்பவெப்பம் ஆகியவை நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. இவ்வேறுபாடு பிற நாடுகளிடையே வணிகத் தொடர்பு மேம்படுவதற்கு அடிப்படையாகும் என்று ஓ.இரா.கிருட்டிண சாமி குறிப்பிடுகின்றார். தமிழ்மக்களிடையே நல்ல இயற்கை வளமும் அதன் மூலம் செழிப்பான விளைச்சலும், தரமானப் பொருள் உற்பத்தியும், கைவினைப் பொருட்கள், நெசவு, பொன் போன்ற உலோகச் செழிப்பும் காணப்பட்டதால் பிற நாட்டினர் தமிழ்நாட்டைத் தேடி வந்து வணிகம் செய்தனர். வெளிநாட்டு வணிகம் முனைப்போடு பண்டையத் தமிழகத்தில் செயல்பட்டு வந்துள்ளது. அயல்நாட்டினர் தமிழகத்திற்குச் வந்து வணிகம் செய்தது போல தமிழ் வணிகர்களும் அயல்நாட்டிற்குச் சென்று வணிகம் செய்தனர்.*

## வணிகரின் ஆளுமைகள்

தனிமனிதனுடைய எண்ணங்கள், செயல்கள், நடத்தைகள், அறிவாற்றல் இவை அனைத்தும் தோன்றும் தனித்தன்மை ஆளுமை எனப்படுகிறது. ஆளுமை என்பது ஒருவருடைய நடத்தை மூலம் மட்டுமே வெளிப்படுத்துவதாக கூறமுடியாது. எண்ணங்கள், உணர்வுகள் நெருக்கமான உறவுகளிடமும் பிற சமூகத் தொடர்பிலும் அவர் நடத்துக் கொள்ளும் முறை போன்றவற்றிலிருந்தும் வெளிப்படுகின்றது. தனிமனிதனுடைய எண்ணங்கள், வெயல்படும் முறை, நடத்தைகள், அவன் பிறருடன் பழகும் முறை, மனப்பான்மைகள், அவனுடைய வாழ்க்கைத் தத்துவம், அறிவாற்றல், உணர்ச்சிகள் ஆகிய யாவும் சேர்ந்த தொகுப்பிலிருந்து அவனுக்கு ஏற்படும் தனித்தன்மையே ஆளுமை (வாழ்வியல் களஞ்சியம் தொகுதி- 2, பக் - 678) என்று வாழ்வியல் களஞ்சியம் குறிப்பிடுகிறது. சங்ககால வணிகர்கள் ஆளுமைத்திறன் மிக்கவர்களாகத் திகழ்ந்துள்ளனர். வணிகர்களின் நேர்மையும் வணிக உத்தியும் அவர்களின் வணிக ஆளுமைக்குச் சான்றாக அமைகிறது.

## வணிகரின் நேர்மை

சங்ககால வணிகர்கள் உண்மை பேசும் பண்புடையவர்களாக இருந்தனர். பொய் பேசுவதைத் தவிர்த்தனர். தமக்குக் கூடுதலாக வரும் வருவாயை வெளிப்படையாகக் காட்டிப் பண்டங்களுக்கு உரிய விலையைச் சொல்லி விற்றனர். பிறர் பொருளை மிகுதியாகக் கொள்ளாமலும்,தம்முடைய பண்டங்களைக் குறைத்துக் கொடுக்காமலும் நடு நிலைமையோடும், உண்மையோடும் வணிகம் நடத்தினர்.

**நெடுநுகத்துப் பகல் போல**<br>
**நடுவுநின்ற நல்நெஞ்சி னோர்**<br>
**வடுஅஞ்சி வாய் மொழிந்து**<br>
**தமவும் பிறவும் ஒப்பநாடிக்**<br>
**கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉம் குறைகொடாது**<br>
**பல்பண்டம் பகர்ந்து வீசும்**<br>
**தொல்கொண்டித் துவன்று இருக்கை**

(பட்டி.பா- 206-212 )

என்ற பாடலடிகள் வணிகரின் நேர்மையை பிரதிபலிக்கின்றன. ஆளுமைத்திறனில் ஒன்றான அறவுணர்வும் வணிகரிடம் மேலோங்கி இருந்தது.

**அறநெறி பிடையா தாற்றி னொழுகி (மது.கா-500)**

என்று மதுரைக்காஞ்சி பாடலடி விளக்குகிறது.

தமக்கு உண்டாகும் ஊதியத்தை வெளிப்படையாகக் காட்டி பண்டங்களை விலைகூறி விற்பவர் வணிகர் என்று சு.வித்தியானந்தன் கூறுவதன் மூலம் அறிய முடிகிறது.

**வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**<br>
**பிறவும் தம்போற் செயின்**

(குறள் - 120 )

என்ற குறள் மூலம் வணிகரின் அறவுணர்வினை அறியமுடிகிறது.

பண்டைத் தமிழகத்தில் வணிகம் மிகவும் நேர்மையாகவும், சிறப்பாகவும் நடைபெற்றுள்ளன. இவ்வணிக முறை தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளதுடன், பல்வேறு நாடுகளை ஈர்த்துள்ளது. பண்பாட்டுப் பரிமாற்றத்திற்கு அடித்தளமாய் அமைந்த வணிகமானது பல்வேறு விழுமியங்களின் அடிப்படையிலும் அமைந்துள்ளது.

## வணிகரின் உத்தி முறைகள்

சங்க கால வணிகமானது உள்நாடு, வெளிநாடு என இரு முறையில் நடைபெற்றுள்ளது. இவ்விரு வணிகமும் செம்மையாக நடைபெறுவதற்கு வணிகர்கள் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தியுள்ளனர். அவ்வுத்திகள் முதன்மையிடம் பிடிப்பது விளம்பர உத்தி, சந்தையில் பொருட்களை வாங்கும் போது நுகர்வோர்க்கு அந்தந்த பொருள்களின் அடையாளம் தெரிந்து கொள்ளும் வகையில் விளம்பரம் செய்துள்ளனர். அங்காடிகளிலும், தெருக்களிலும் விற்பனை செய்யும் பொருளைக் குறிக்கும் விதமாக வண்ணக்கொடிகளை வைத்துள்ளனர். அக்கொடிகள் விற்பனைப் பொருள்களின் அடையாளச் சின்னமாகத் திகழ்ந்தன.

*வணிகத்தில் விளம்பரம் என்பது மிக முக்கியமானச் செயல் என்பதை, ஒரு நல்ல விளம்பரம் நன்றாகப் பேச வேண்டும். அது ஒரு மௌனமான விற்பனையாளன், தான் விவரிக்கும் பொருளைப் பற்றி அது உரக்கக் கூவுகிறது. என்று அறிஞர் ஜார்ஜினா பீட்டர் கூறுகிறார். சங்ககால வணிகர்கள் விளம்பரத்தின் அவசியத்தை நன்கு அறிந்துள்ளனர். காவிர்ப்பூம்பட்டினத்தில் கடைத் தெருவின் இருபுறமும் கால்களை ஊன்றிக் கொடிகளை விற்பனைப்பொருளின் அடையாளமாகப் பறக்க விட்டிருந்தனர், என்பதை*

***மலர் அணி வாயில் பலர் தொழு கொடியும்***

***(பட்டி - 160)***

*என்ற அடி உணர்த்துகிறது. கள்ளுண்பார் செல்லும் கடைகளின் வெளிப்புறத்தே விலையை எடுத்துக்கூறும் வண்ணம் கொடிகளை நட்டுள்ளனர்.*

***பைங்கொடி நுடங்கும் பலர் புகுவாயில்***

***(பெரும்.பாண் -335)***

***நெடுங்கொடி நுடங்கும் நறவுமலி மறுகில்***

***(அகம்- 126)***

***நறவு நொடைக் கொடியாட (பட்டி.பா- 16)***

***கள்ளின் களி நவில் கொடிட (மது.கா- 372)***

*என வரும் பாடலடிகளால் அறிய முடிகிறது. விற்பனையின் அடையாளமாகக் கொடிகளைப் பறக்க விடுவது ஒருவகையான வணிக நுணுக்க உத்தி, இதன் மூலம் மக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்கள் இருக்கும் அங்காடியினை விரைவாக அறிந்துக் கொள்ளவும், வாங்கிச் செல்லவும் ஏதுவாக அமைந்தது.*

*மேலும் கடல் வாணிகத்திலும் கொடி பறக்கவிடும் உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது. நாவாய்களில் பொருள்களை அனுப்பும் போது கொடிகளைப் பறக்க விட்டுள்ளனர்.*

***நெருங்கொடி மிசைஇ (மது.கா-79)***
***தூங்கு நாவாய் துவன்று இருக்கை***
***மிசைக் கூம்பின் நசைக் கொடியும்***

***(பட்டி.பா-174-178)***

*என வரும் அடிகளால் நாவாய்களிலும் கொடிகள் பறக்கவிட்டு வணிகத்தில் பொருள் ஈட்டியுள்ளனர் என்ற செய்தியை அறிய முடிகிறது. கொடிகளுடன் கப்பல் செல்லும் போது அவை எந்நாட்டுக்ள கப்பல், எந்நாட்டுப் பொருட்களை, ஏற்றுமதி இறக்குமதி செய்கிறது என்பதனை அறிய முடிகிறது. மேலும் ஒவ்வொரு நாடும் அவர்களுக்குரிய சின்னத்தைப் பொறித்து அனுப்புவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். என்பதையும் அறிய முடிகிறது.*

***புலிபொறித்துப் புறம் போக்கி***
***மதி நிறைந்த மலி மண்டபம்***

***(பட்டி.பா- 135-136)***

*என்ற பாடலடிகளால் முத்திரை பதிக்கும் உத்தியினை வணிகர் கையாண்டதனை அறிய முடிகிறது.*

**அயல் நாட்டினர் வருகை**

*சங்க காலத்தில் தமிழ்நாடு வணிகத்திற்குப் புகழ்பெற்று விளங்கியது. மேற்;கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் தரை வழியாகவும் கடல் வழியாகவும் பலர் தமிழகத்திற்கு வந்து வணிகம் செய்தனர். மேற்கிலிருந்து தமிழகத்திற்கு வந்த கிரேக்கர், ரோமானியர், அரேபியர், பராசீகர், போர்ச்சுகீசியர், ஆங்கிலேயர் போன்றோரும் கிழக்கிலிருந்து சீனரும் வந்து தமிழகத்தில் தங்கியிருந்து வணிகம் செய்துள்ளனர். வணிகம் செய்ய வந்த வெளிநாட்டவர்கள் தமிழகத்தில் தங்கி தமிழ்மொழியோடும் தமிழர்களோடும் ஒன்றிணைந்திருந்தனர் என்பதை,*

***பல்லாய மொடு பதிபழகி***
***வேறுவேறு உயர்ந்த முதுவாய் ஒக்கல்***
***சாறு அயர் மூதூர் சென்று தெக்காங்கு***
***மொழி பல பெருகிய பழிதீர் தோத்துப***
***புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும்***
***முட்டாச் சிறப்பின் பட்டினம்***

***(பட்டி.பா - 213 - 218 )***

*பல்வேறு தொழில்புரியும் வணிகர் நிறைந்த நகரமாகக் காவிரிபூம்பட்டினம் திகழ்ந்தது. வேறுவேறு மொழி பேசும் பிற நாட்டினரும் தமிழ்நாட்டினரோடு கலந்து உளமகிழ்வோடு வாழ்ந்தனர் என்பதைப் பட்டினப்பாலை விவரிக்கின்றது.*

**மொழிக்கலப்பிற்கு அடிப்படை**

*தென்திராவிட மொழிக்குடும்பங்களில் அடங்கும் தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற பிறமொழிகள் தமிழுடன் கலப்பதற்கு இலக்கிய - இலக்கணங்கள் அடிப்படையாக இருந்தன. பிறநாட்டு மொழியான சீனம், கிரேக்கம், அரேபியம் போன்ற மொழிகள் தமிழ்மொழியுடன் கலப்பதற்கு வணிகமும் அவர்களின் ஆட்சிமுறையும் காரணியாக இருந்துள்ளன. மனித நாகரிகரித்தின் வளர்ச்சியால் இடத்தாலும் காலத்தாலும் வேறுப்பட்டமைகின்ற மொழிக்களுக்கிடையே தொடர்பு ஏற்படுகிறது. ஒரு மொழியைப் பேசும் கூட்டத்தோடு தொடர்புபடுகின்ற ஏனைய மொழிகள் அம்மொழி மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அம்மொழி தன்னுடன் தொடர்பு கொள்ளும் மொழிகளிலும் தாக்கத்தை உண்டாக்குகின்றன. தமிழ்மொழி மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வளம் பெற்ற மொழியாகத் திகழ்கின்றது. தமிழ்மொழி பேசுவோருடன் பல்வேறு காரணங்களால் பல்வேறு மொழி பேசுவோர்களுக்குத் தொடர்பு ஏற்பட்டதாலும் தமிழில் பிற மொழிக்கலப்பு சாத்தியமானது. மொழிக்கலப்பின் காரணிகள் மதபோதகம், வணிகம், ஆட்சிமுறை போன்ற பல காரணிகள் காணப்படுகின்றன. அக்காரணிகளில் வணிகத்தொடர்பு முக்கிய முதன்மையான காரணியாகக் கருதப்படுகிறது.*

*சங்ககாலத்தில் தமிழகம் மேலை நாடுகளுடனும் கீழை நாடுகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டியிருந்தது. மேற்கே யவனமும் கிரேக்கமும் தமிழகத்தோடு வணிகம் செய்தன. கிழக்கே மலேயா, சீனா முதலிய நாடுகளுடன் தமிழகம் வணிகம் செய்தது. பாண்டிய நாட்டிலிருந்து முத்தும் சேரநாட்டிலிருந்து தந்தம், மிளகு முதலியனவும் சோழநாட்டிலிருந்து பட்டும் பிறப்பொருட்களும் வெளிநாட்டிற்கு ஏறுமதி செய்யப்பட்டன. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாவை விளக்கு, மதுவகைகள், தங்கம், குதிரை முதலியன தமிழகத்தில் வந்து குவிந்தன.*

***யவனர் தந்த வினைமான் நன்கலம்***
***பொன்னோடு வந்து கறியோடு பெயரும்***
***(அகம் - 149)***

***மேலும், (பட்டி.பா. - 185-193)***

*எனும் பாடலடிகள் தமிழகம் அயல்நாட்டினருடன் தொடர்பை படம்பிடித்துக்காட்டும் காட்சிப் பேழையாய் இருப்பதை உணர முடிகிறது.*

**பாபிலோனியா**

*பாபிலோனியர்கள் தமிழகத்துடன் வணிகத்தொடர்பில் இருந்துள்ளனர். அப்போது தமிழ்ச்சொற்கள் அந்நாட்டு மொழியில் கலக்கலாயின. பாபிலோனிய மொழிச் சொற்களும் தமிழ்மொழியில் இணைந்தன என்பதை வரலாற்று ஆய்வாளர் கே.கே.பிள்ளை பழங்கால உடையைக் குறிப்பிடும் பாபிலோனிய நாட்டு பட்டியல் ஒன்றில் மஸ்லின் என்னும் துணிவகையைக் குறிக்கும் சிந்து என்னும் சொல் எழுதப்பட்டுள்ளது. மஸ்லின் என்பது மிகமிக நுண்ணிய துணிவகைகள் தமிழகத்தில் நெய்யப்பட்டு வந்தன. இத்துணி தமிழகத்திலிருந்து பாபிலோனியாவிற்கு ஏற்றுமதியாகி இருக்க வேண்டும். சிந்து என்னும் சொல் தமிழில் கொடியைக் குறிக்கும். கொடி துணியாலானது எனவே இச்சொல் துணியைக் குறிக்கலாயிற்று. கன்னடத்திலும் குளுவிலும் துணிக்கு சிந்து என்று பெயர் வழங்குவது குறிப்பிடத்தக்கது என்று மொழிக்கலப்பிற்கான உதாரணத்தை எடுத்துக்காட்டுகிறார்.*

**கிரேக்கம்**

*கிரேக்த்திற்கும் தமிழகத்திற்கும் இருக்கும் தொடர்பு மிகப் பழமையானது. அவர்களுடனான வணிகம் சிறப்பிற்குரியது. கி.மு.ஐந்தாம் நூற்றாண்டில் கிரேக்கர்கள் தமிழகத்துடன் வணிகத்தொடர்பில் ஈடுப்பட்டனர். இவ்வணிகத்தின் மூலம் தமிழ்ச்சொற்கள் பல கிரேக்க மொழியில் நுழைந்து இடம் பெற்றுள்ளன. சொபோகிகளீஸ், அரிஸ்டோ, பேனீஸ் முதலிய கிரேக்க அறிஞர்களின் நூல்களில் இவற்றை காணலாம். அரிசி என்னும் தமிழ்ச்சொல் கிரேக்க மொழியில்*

நுழைந்து அரிஸா என்று உருக்குலைந்தது. அம்மொழியில் கருவா (இலங்கம்) என்னும் தமிழ்ச்சொல் கார்ப்பியன் என்றும் இஞசிவேர் சின்ஙிபேராஸ் என்றும் பிப்பாலி பெர்பெரியாகவும் உருமாற்றம் அடைந்தன. என்றுரைக்கிறார் கே.கே.பிள்ளை

கிரேக்க மொழியின் ஒருஸா என்பது தமிழில் அரிசியாகும். தமிழ்ச்சொல்லின் இஞ்சிவேர் என்பது சிக்கிபேரிஸ் என்றாகிப பிறகு ஸிகிபேர் என்று மாறி ஆங்கிலத்தில் ஜிஞ்ஜர் என்றானது என்றும் தமிழ்க்குருத்தம் ஆங்கிலத்தில் கோரண்டம் என்றானது என்று தமிழில் வழங்கப்பட்ட சில சொற்களைக் கிரேக்கம் மற்றும் இலத்தீனில் குறிப்பிடும் முறைப்பற்றி டாக்டர்.சி.பாலசுப்பிரமணியன் குறிப்பிடுகிறார்.

கிரேக்க நாட்டாரும் உரோம் நாட்டாரும் அக்காலத்தில் யவனர் என்று சிறப்புப் பெயர் பெற்றிருந்தனர். யவனர்கள் என்ற பெயர் ரோமானியர்களைப் பொதுவில் குறிக்கும் என்றாலும் கிழக்குமத்திய தரைக்கடல் பகுதியைச் சேர்ந்த எல்லா நாட்டு மாலுமிகளும் வணிகர்களும் யவனர்கள் என்று அழைக்கப்பட்டனர். என்று எஸ்.கிருணன் குறிப்பிடுகின்றார். மேலும் டாக்டர்.சி.பாலசுப்பிரமணியன் தமிழ் கிரேக்க மொழிக்கலப்பைக் குறிப்பிடும் போது

| தமிழ் | கிரேக்க இலத்தீன் |
|---|---|
| அரிசி | ஒரிஸா |
| சோபட்டினம் | சோபட்னா |
| காவிரி | கபிரிஸ |
| முசிறி | முசரிஸ் |
| கருவூர் | கரோரா |
| மதுரை | மதோரா |
| தொண்டி | திண்டிஸ் |
| குமரி | கொமாரி |
| கொற்கை | கொல்டசாய் |
| நாகப்பட்டினம் | நிகாமா |
| மசூலிப்பட்டினம் | மசோலியா |

போன்ற சொற்கள் வழங்கி வருவதனைக் காட்டுகிறார். இவ்வாறு இருவேறு மொழிக்களுக்கிடையே தோன்றும் சொற்கலப்பானது யவனருடன் கொண்ட வணிகத் தொடர்பின் மூலம் நடைபெற்றதை அறியமுடிகிறது.

சேரநாட்டு துறைமுகப்பட்டினம் தொண்டியைத் திண்டிஸ் என்றும் முசிறியை முஸிரிஸ் என்றும் பொற்காட்டைப் பகரி என்றும் குமரியை கொமாரி என்றும் ரோமர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவற்றைப் போலவே தமிழகத்தின் கீழை கடற்கரைத் துறைமுகங்களான கொற்கையை கொல்சாய் என்றும் நாகப்பட்டினத்தை நிகாமா என்றும் காவிரிப்பூம்பட்டினத்தை கமரா என்றும் புதுச்சேரியைப் பொதுகே என்றும் மரக்காணத்தைச் சோபட்னா என்றும் மசூலிப்பட்டினத்தை மசோலியா என்றும் அந்நூல்கள் குறிப்பிடுகின்றன என்று ரோமாபுரி ஆசிரியர்கள் எழுதிய நூல்களின் வாயிலாகத் தமிழகத்துறைமுகத்திற்கு ரோமானியர் இட்ட பெயர்களை அறியமுடிகிறது. என்பதை வரலாற்று அறிஞர் எடுத்தியம்புகிறார். யவன-தமிழர் வாணிகத் தொடர்பின் காரணமாகச் சில கிரேக்க மொழிச்சொற்கள் தமிழில் கலந்துவிட்டன. மத்திகை, சுருங்கை, கலம், கன்னல் முதலான கிரேக்க மொழிச் சொற்கள் தமிழில் கலந்துவிட்டன. என்று மயிலைச்சீனிச்சாமி ஆய்துரைத்துள்ளார்.

***குடிநீர்க் கன்னல் இனைத்தென்று இசைப்ப***
***முத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை***
***(முல்.பா - 58-59)***

என வரும் பாடலடிகள் கன்னல், மத்திகை எனும் கிரேக்கச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளமையைப் புலப்படுத்துகின்றன. கன்னல் என்பது காலத்தை அளக்கும் கருவியாகும். யவனர் செங்கடலுக்கு இட்டப்பெயர் எரித்தரைக் கடல் (MARIS ERYTHACI) எரித்தரை என்னும் கிரேக்க மொழிச்சொல்லுக்குச் செங்கடல் என்பது பொருள் இம்முறையில் கிரேக்கமும் - தமிழும் மொழிக்கலப்பிற்கு உள்ளாக்கப்பட்டதை என்பதை விளக்குகிறார்.

## அரேபியர்

அரேபியர் தமிழகத்துடன் நீண்ட நெடிய வணிகத்தொடர்பு கொண்டு இருந்தனர். தமிழ்நாட்டுற்கு வடமேற்கிலிருந்து வந்த

அரேபியவணிகர் சேரநாட்டின் முசிறி துறைமுகத்தில் தங்கி இருந்து வணிகம் செய்தனர். ஒரு நாட்டில் தங்கும்போது அந்நாட்டின் மொழியைப் பழகிக் கொள்வது இயல்பாகும். அவ்வகையில் தமிழோடு அரேபியம் கலக்கலாயின. முசிறியில் அவர்கள் வாணிகஞ் செய்த இடத்திற்குப் பந்தர் என்று பெயரிட்டிருந்தார்கள். பந்தர் என்றால் அரபு மொழியில் கடைவீதி என்பது பொருள் என்று வணிகமானது மொழிக்கலப்பிற்குக் காரணியாகத் திகழ்ந்ததை எடுத்துரைக்கிறார் மயிலைச்சீனிச்சாமி.

**நன்கல வெறுக்கைத் துஞ்சும் பந்தர் (பதிற் - 55)**
**பந்தர் பெயரிய பேரிசை மூதூர்(பதிற் - 67)**
**பந்தர் பயந்த பலர் புகழ்முத்தம் (பதிற் - 74)**

என வரும் சங்க இலக்கியப் பாடலடிகளில் பந்தர் என்னும் சொல் பயின்று வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அரேபியர் தமிழ் நாட்டோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்தப்படியால் அரிசி என்னும் தமிழ்ச்சொல் அரபுமொழியில் சென்று ஒருக் என்று வழங்கப்படுகிறது.

## தமிழ் - சீனம்

சங்ககால மக்கள் மேலை நாடுகள் மட்டுமின்றி சீனா போன்ற கீழை நாடுகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். சீனத்துடன் தமிழகம் மேற்கொண்டிருந்த வணிகத்தொடர்பானது மிகவும் பழைமையானது. தமிழகத்து பண்டங்கள் கி.மு.ஏழாம் நூற்றாண்டிலேயே சீனத்தில் இறக்குமதியாயின என்று அந்நாட்டு வரலாறு குறிப்பிடுகிறது. சீனத்து பட்டாடையும், சருக்குகரையும் தமிழகம் ஏற்றுக் கொண்டது. இதனால் இன்றளவும் பட்டுக்குச் சீனம் என்றும் சருக்கரைக்குச் சீனம் என்றும் பெயர் வழங்கி வருகின்றது, சீனக்கண்ணாடி, சீனக்கற்பூரம், சீனக்கருவா, சீனக்களிமண், சீனக்காக்கை, சீனக்காரம், சீனக்கிழங்கு, சீனக்கிளி, சீனக்குடை, சீனச்சட்டி, சீனர் சரக்கு, சீனச் சுக்கான், சீனச்சுண்ணம், சீனத்து முத்து, சீனநெல், சீனப்புல், சீனப்பூ, சீனமல்லிகை, சீனப் பருந்தி, சீனமிளகு, சீனரேக்கு, சீனவங்கம், சீனவரிவண்டு, சீனக்கற்கண்டு, சீனசசுருள், என்னும் சொற்கள் தமிழ்மொழியில் பயின்று வருகின்றன. என்று சீனமொழிக் கலப்பினைப் பற்றி விளக்குகிறார் கே.கே.பிள்ளை.

வெளிநாட்டவரின் வணிகத்தொடர்பின் மூலம் தமிழ்மொழியோடு அயல்நாட்டினர் மொழிச்சொற்கள் கலந்தன. அயல்நாட்டினர் மொழியிலும் தமிழ்ச்சொற்கள் கலக்காலயின. அச்சொற்களில் பல தமிழகத்தில் இன்றளவும் புழக்கத்தில் இருந்து வருகின்றன. சங்காலத்திற்குப் பின் மிக நீண்ட நெடிய காலத்திற்கு பின்னரே வணிகத்தின் பொருட்டு மதபோதகத்திற்காக வந்த ஆங்கிலேயர் தமிழகத்தை அடிமைப்படுத்தி ஆட்சிச் செய்தனர். அவர்களின் ஆட்சிக் காலம் நீண்டது. அச்சமயத்தில் ஆங்கிலம் தமிழ்மொழியோடு இயைபுடைய சொற்கள் மட்டும் இணைந்தன. தமிழ்மொழி தூய்மை இழக்கவில்லை

## தொகுப்புரை

சங்ககால வணிகம் அக்காலத்திய பொருளியல், வாழ்வியல் இரண்டினையும் எடுத்துரைக்கும் காட்சிப்பேழையாகும். வணிகத்தில் வணிகரின் ஆளுமைத்தன்மையைக் காணமுடிகிறது. வணிகரின் நேர்மையான வணிகம், விளம்பர உத்தி போன்றவை அவர்களின் ஆளுமைக்குச் சான்றாக அமைகின்றன. பிறமொழிக்கலப்பு ஏற்பட முக்கிய காரணமாக இருந்தது வெளிநாட்டு வணிகமாகும். வெளிநாட்டவரின் வருகை தமிழில் பிறமொழியும், பிறமொழியில் தமிழும் ஊடுருவக் காரணமானது. யவனர் என்றழைக்கப்பட்ட கிரேக்க, ரோம் நாட்டினருடன் தமிழர்கள் வணிகத் தொடர்பினைக் கொண்டிருந்தது. தமிழ்மொழியின் அரிசி அம்மொழியில் ஒரைஸா என மாறியது குறிப்பிடத்தக்கது. யவனர்கள் தமிழகத் துறைமுகங்களுக்கு இட்ட பெயர்கள் சிறப்பிற்குரியது. அரேபியரின் பந்தர் எனும் சொல் சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ளது மொழிக்கலப்பிற்கான சான்றாக அமைந்துள்ளது.

சீனம் எனும்சொல் தமிழில் வெகு இடங்களில் பயின்று வருகின்றது. மொழிக்கலப்பின் மூலம் உருவானன புதியச் சொற்கள் பெருமளவு இன்றளவும் புழக்கத்தில் இருந்து வருகின்றன.

### துணைநின்ற நூற்கள்


1. இளங்குமரன். இரா சங்க இலக்கியம் மூலமுமம் உரையும், புறநானூறு, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 2022
2. கலைக்களஞ்சியம் தொகுதி-4, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை - 2, மு,ப - 1956
3. சிங்காரவடிவேலன்.அர, சங்க இலக்கியம் மூலமுமம் உரையும், ஐங்குறுநூறு வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 2022
4. சுப்பிரமணியன்.ச.வே, சங்க இலக்கியம் மூலமுமம் உரையும், பத்துப்பாட்டு, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 2022
5. தமிழண்ணல், சங்க இலக்கியம் மூலமுமம் உரையும், குறுந்தொகை, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 2022
6. பரிமணம். அ.மா பதிற்றுப்பத்து சங்க இலக்கியம் மூலமுமம் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 2022
7. பாலசுப்பிரமணியன்.சி சங்க இலக்கியம் சில பார்வைகள், நறுமலர் பதிப்பகம் சென்னை- 108 மு.ப - 1989
8. பிள்ளை.கே.கே, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை பதினைந்தாம் பதிப்பு - 2019
9. மீனவன். நா, சங்க இலக்கியம் மூலமுமம் உரையும், அகநானூறு - களிற்றியானை நிரை, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 2022
10. மீனவன். நா, சங்க இலக்கியம் மூலமுமம் உரையும், அகநானூறு - மணிமிடைபவளம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 2022
11. மீனவன்.நா, சங்க இலக்கியம் மூலமுமம் உரையும், அகநானூறு - நித்திலக்கோவை வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 2022
12. வாழ்வியல் களஞ்சியம் தொகுதி-2, தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர், மு.ப - 1985
13. வேங்கடசாமி. சீனி, பழங்காலத் தமிழர் வாணிகம் (சங்ககாலம்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை
14. ஜார்ஜினா பீட்டர், சொந்தத்தொழிலும் சுயமூலதனமும், கண்ணதாசன் பதிப்பகம், மு.ப - 2006